முருகப்பெருமான் துணை

**மகான் சட்டநாதர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.02.2024**, வெள்ளிக்கிழமை

1. ஞானபலம் உலகம் அடைய
ஞானபண்டிதன் வழிபாட்டை
தானதருமத்தோடு உருவாக்கி
தவசியாக அருளும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது கலைதிங்கள்
வரங்களென மூவாறோர் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 19 ம் நாள், 02.02.2024, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை சட்டநாதர் யானும்
அருளுவேன் உலகநலம் பெற
வாசிவென்ற ஞானிகள் படை
வலம் வந்து அரங்கன் குடிலை
4. குடிலை பாதுகாத்து வருக
குருவரங்கன் ஆசி உபதேசத்திலும்
நாடியே ஞானிகள் பலர் கலந்து
நல்லாற்றல் தந்து அருள
5. அருளவே உலக மக்களெல்லாம்
அரங்கன் ஆசி தந்து தரும்
அருளமுதை குடிலனுகி உண்டு வர
அனைத்து ஞானிகளின் ஆற்றலும்
6. ஆற்றலும் மக்களுக்கு சக்தியாக
அனுகூலமாக மாறி காப்புத் தரும்
மாற்றம் தரும் ஞானிகள் பூசை
முழுமதி தோறும் அரங்கன் நடத்தி
7. நடத்தி மக்களுக்கு ஆசி தர
நம்பிக்கை கொண்டு மக்கள்
தடையற தொடர்ந்து வர
தவராஜனிடம் தீட்சை ஆசிபெற

8. ஆசிபெற வினைகள் விலகும்
ஆசிபெற ஞானம் பெருகும்
ஆசிபெற அனுகுவார் யாவர்க்கும்
அகத்தியரோடு ஞானிகள் பலரின்

9. பலரின் தவபலம் சித்தியாகி
பாருலகையே மாற்றும் வல்லமையான
பலமிக்க ஞானப் படைகளாக
பலரும் உருவாகி மாற்றம்

10. மாற்றம் அரங்கமகான் அவதார
மகத்துவமாகப் பெருகி இனிதே
ஆற்றல்மிக்க அரசியல் களமாக
ஆன்மீக அரசியல் களம் உருவாகி

11. ஆகியே ஞானத் தலைமையும்
அகிலமெங்கும் ஞானிகள் ஆட்சியாக
மகிழவே மக்களுக்கு மாற்றம்
மண்ணுலகில் அரங்கனால் இனிதே நடந்தேறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–